(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.01/2023 |
| Deposition Of Witness for | : | PW1 |
| Name | : | **Tr.P.Madhusudhan Reddy** |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **23rd January 2024.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்சமயம் சென்னை நில அளவை மற்றும் நில வரி திட்ட இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும்

**17.12.2022–ம் தேதியிட்ட குற்ற வழக்கு தொடர்வதற்கான அனுமதி என்னால் வழங்கப்பட்டது ஆகும்** அது **அ.த.சா.ஆ.1** ஆகும்.

2. சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரக அலுவலகத்திலிருந்து 17.11.2022–ம் தேதியிட்ட கடிதம் மூலம். சிவகங்கை மாவட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி S.புதூர் ஊராட்சி ஒன்றியம் திரு.நிர்மல் குமார் என்பவர் மீது குற்ற வழக்கு தொடர அனுமதி கேட்டு அது தொடர்பான திரு.நிர்மல் குமார் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் வழக்கு தொடர்பான மற்ற ஆவணங்களும் இணைத்து அனுப்பப்பட்டிருந்தது.

3. மேற்படி ஆவணங்களை நான் பரிசீலனை செய்துவிட்டு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவ காவல் ஆய்வாளரை அழைத்தேன் அவர் 15.12.2022 அன்று நேரடியாக வருகை புரிந்து வழக்கு ஆவணங்களுடன் என்னை சந்தித்தார். இந்த வழக்கு தொடர்பான, கைப்பற்றுதல் மகஜர், தடய அறிவியல் அறிக்கை, ஆகியவற்றை அன்றைய தினம் பரிசீலனை செய்தேன்.

4. 17.12.2022–ம் தேதியன்று எதிரி திரு. நிர்மல் குமார் மீது குற்ற வழக்கு தொடர போதிய முகாந்திரம் இருப்பதாக நான் கருதினேன் அதன்

அடிப்படையில் அன்றைய தினம் எதிரியின் மீது குற்ற வழக்கு தொடர அனுமதி வழங்கினேன். இது தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

1. இந்த வழக்கு சம்மந்தமாக ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு போலிசார் என்றைய தேதியில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் 03.01.2023 அன்று என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னை யார் விசாரித்தார்கள் என்றால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் விசாரித்தார் அவர் பெயர் ஞாபகமில்லை. எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார் என்றால் மதியம் 3 முதல் 4 மணிக்குள் விசாரித்தார்.

2. நான் என்னென்ன ஆவணங்களை பார்வையிட்டேன் என்று நான் வழங்கிய குற்ற வழக்கு தொடர்பு அனுமதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். புகாரையோ முதல் தகவல் அறிக்கையின் அசலையோ நான் பார்வையிட்டேனா என்றால் முதல் தகவல் அறிக்கையின் நகல் அலுவலக கோப்பிலிருந்தது அதை நான் பார்வையிட்டேன்.

3. எதிரியின் வாக்குமூலம் அந்த கோப்பில் இருந்ததா என்றால் தற்போது ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எதிரியை நேரடியாக அழைத்து விசாரித்து விளக்கம் கேட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 03.12.2021 அன்று சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பொறி வைப்பு நடவடிக்கை என்றைய தினம் தொடங்கப்பட்டது என்றால் 07.12.2021 அன்று ஆகும்.

4. 03.12.2021 புகார் கொடுத்த அன்றே எதிரியை புகார்தாரர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் வைத்து சந்தித்தாரா என்றால் இல்லை, அலுவலகத்தின் எதிரில் வெளியில் வைத்து சந்தித்துள்ளார். S.புதூர்க்கும் சிவகங்கைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 70 கிலோமீட்டர் இருக்கலாம். 03.12.2021 தேதி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தின் வெளியில் வைத்து புகார்தாரர் லஞ்சம் கொடுக்க முயற்சி செய்தது போன்ற தகவல் எதுவும் எனது பரிசீலனையில் தெரிந்ததா என்றால் அன்றைய தேதியில் புகார்தாரர் லஞ்ச பணம் எதுவும் கொடுக்கவில்லை ஆனால் எதிரி லஞ்சம் கேட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

5. அதேபோல் 06.12.2021 அன்று குற்றச் சம்பவம் எதுவும் நடந்ததாக தெரியவந்ததா என்றால் இல்லை. செட்டிகுறிச்சி , S.புதூர் ,உலகம்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகளுக்கு சுற்றுசுவர் அமைக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டம் ஆகும் என்றால் சரிதான். மேற்படி பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்படுமா என்றால் இல்லை ஆனால் ஒப்பந்ததாரர் இருப்பார்கள்.

6. நான் ஆவணங்களை பார்வையிட்ட வரையில் மேற்படி பணிக்கான உத்தரவு எந்த தேதியில் வழங்கப்பட்டதாக தெரியவந்தது என்றால் 29.11.2021 என்று நினைக்கின்றேன். நான் ஆவணங்களை சரியாக பார்வையிடாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற பதவியானது வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) என்று இரு பதவிகள் உள்ளது என்றால் ஆமாம்.

7. அந்த நேரத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) யார் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த புகார்தாரர் வெள்ளச்சாமி என்பவரை வென்டாராக நியமிக்க யாரும் உத்தரவு

பிறபிக்கவில்லை என்றால் அந்த நேரத்தில் யாரும் உத்தரவிடவில்லை. இந்த புகார்தாரர் வெள்ளச்சாமிக்கும் எதிரிக்கும் சம்பவத்திற்கு முன்பாகவே முன் விரோதம் இருந்த விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பொதுவாக ஒரு ஒப்பந்ததாரர் பணியினை சரியாக செய்யவில்லை என்றால் அவருக்கு மீண்டும் பணி வழங்க மாட்டார்கள் என்றால் பொதுவாக எந்த கருத்தும் சொல்ல இயலாது.

8. எதிரியின் வாக்குமூலத்தை நான் பார்வையிட்டதாக என்னால் கொடுக்கப்பட்ட பிரிவு 161 (3) கு.வி.மு.ச வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த வாக்குமூலத்தை நான் வழங்கிய குற்ற வழக்க தொடர்வு அனுமதி உத்தரவுடன் இணைத்து கொடுத்தேனா என்றால் இல்லை. புலன் விசாரணை அதிகாரி 15.12.2022 அன்று நான் சந்தித்தாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் வரச்சொன்னேனா அல்லது அவர்களாகவே வந்தார்களா என்றால் நான் தான் வரச்சொன்னேன்.

9. அந்த காவல் அதிகாரியின் பெயர் தெரியுமா என்றால் காவல் ஆய்வாளர் என்ற நிலை மட்டும் தெரியும். குற்ற வழக்கு தொடர்வு அனுமதி வேண்டி 17.11.2022 தேதியிட்ட கடிதம் வந்தபோதே இந்த வழக்கு கோப்புடன் ஆவணங்கள் அனைத்தும் எனக்கு வழங்கப்பட்டதா என்றால்

தடய அறிவியல் அறிக்கை, கைப்பற்றுதல் மகஜர் போன்றவை மட்டும் இல்லை. 15.12.2022 அன்று புலன் விசாரணை அதிகாரி என்னை சந்திக்கும் போது ஒரு மாதிரி குற்ற வழக்கு தொடர்வு இசைவாணை எனக்கு கொடுத்தார்கள் என்றால் இல்லை. நான் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்யாமலும், முழு மனநிறைவு அடையாமலும் இயந்திரதனமாகவும் எதிரியின் மீது குற்ற வழக்க தொடர்வு அனுமதி வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.01.23 16:12:37 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.